கிறார்கள். ஆகவே, பருத்தி சாகுபடிக்குத் தேவையான பூச்சிக்கொல்லி மருந்துகளை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வது போல, நெட்டிமைப் பருத்தி விதைகளையும் இறக்குமதி செய்து, உற்பத்தியைப் பெருக்க அரசாங்கம் முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: மூலக் கேள்விக்கும், அங்கத்தினர் கேள்விக்கும் சம்பந்தம் இல்லாவிட்டாலும், அவருடைய கருத்து அரசின் முயற்சியில் இருந்து வருகிறது.

திரு. கே. கந்தசாமி: தலைவரவர்களே, எண்ட்ரின், செவின் மருந்துகள் பருத்தி சாகுபடிக்கு நல்லது என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். ஆனால் பிளாக் டெவலப்மென்ட் அதிகாரிகள் ஸ்டாக் இல்லை, நல்லதல்ல என்று சொல்கிறார்கள். மதுரையில் சில இடங்களில் இந்த மருந்துகள் கிலோ 17½ ரூபாய்க்கு தனிப்பட்ட வியாபாரிகளால் விற்கப்படுகிறது. ஆனால் அரசாங்க விலை 10 ரூபாய் தான். தனிப்பட்டவர்களிடம் இந்த மருந்து வகைகள் கிடைக்கின்றன. அரசாங்க அலுவலகங்களில் இல்லை என்று சொல்லி விடுகிறார்கள். அதன் மர்மம் என்ன என்று அரசாங்கம் அறியுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அந்தவிதமான குறைகள் இதுவரை அரசுக்கு வரவில்லை. அதைப்பற்றி அரசாங்கம் பரிசிலனை செய்யும்.

டிராக்டர்கள் வழங்கல்

*112. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மைத் தொழில் கழகம் மூலம் 1971-72-ம் ஆண்டில் டிராக்டர்கள் கோரி எத்தனை பேர் பதிவு செய்து கொண்டார்கள்?

(இ) அவர்களில் எத்தனை பேருக்கு டிராக்டர்கள் கொடுக்கப்பட்டன?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) 756 பேர்கள் பதிவு செய்துகொண்டார்கள்.

(இ) 616 பேர்களுக்குக் கொடுக்கப்பட்டன.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, இந்த டிராக்டர்கள் எந்த அடிப்படையில் வழங்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: விவசாயிகளின் விண்ணப்பங்களின் தகுதியைப் பார்த்து வழங்கப்படுகின்றன.

1972 ஆகஸ்ட் 12]

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, வெளிநாடுகளில் இருக்கின்ற உறவினர்களால் அன்பளிப்பாக வழங்கப்படும் டிராக்டர் போன்ற விவசாயக் கருவிகளை பெறுவதற்கு வழிவகை ஏதாவது இருக்கிறதா? அப்படியானால் அது எந்த வகையில் நிறைவு செய்யப்படுகிறது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அப்படி ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படி வருமானால் அது பற்றி பரிசீலனை செய்யலாம்.

திரு. த. சோனையா: டிராக்டர்கள் ஊராட்சி ஒன்றியங்களுக்கு முழு மானியத் தொகை அடிப்படையில் அளிக்கப்படுகிறதா? அதில் திரிபுவனம் போன்ற ஒன்றிரண்டு ஒன்றியங்களுக்கு அளிக்கப்படவில்லையே, அமைச்சர் தலையிட்டு இதுபோல டிராக்டர்கள் வழங்கப்படாத ஒன்றியங்களுக்கு வழங்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அது பற்றி தனிக் கேள்வி போடவும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: நமது மாநிலத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்கள் அனைத்திற்கும் டிராக்டர்கள் வழங்கப்பட்டுவிட்டனவா? வழங்கப்படாமல் இருந்தால் இனியேனும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: கொடுக்காதிருந்தால் அது பற்றி கவனிக்கப்படும்.

Bus taken over by Government

*** 113 *Q.*—THIRU N. K. PALANISAMY:** Will the Hon. the Minister for Transport be pleased to state whether the Government have paid compensation for the take over of buses from the private bus owners for the period 1970–71?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: 1970-71-ஆம் ஆண்டில் தனியார் பேருந்துகள் எதையும் அரசு நாட்டுடைமையாக்கவில்லை. எனவே இழப்பீடு தருவது பற்றிய வினா எழவில்லை.

புறநகர்ப் பேருந்துகளிலிருந்து வருமானம்

*** 114. வினா.—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புறநகர்ப் பகுதிகளில் ஓடுகின்ற அரசுப் பேருந்தின் மூலம் 1970-71-ஆம் ஆண்டில் அரசுக்கு கிடைத்த வருமானம் எவ்வளவு?